## Sub Court, Eraniel

O.S. No.39/2024
Date: 28.01.2026
பி.வா.சா.1 - திருமதி.தேவகி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதியின் பெயர் எனக்கு தெரியவில்லை. அவரை சீட்டுக்காரர் என்று சொல்வோம். அவரை 15 வருடங்களாக எனக்குத் தெரியும்.வழக்கு சம்பவத்திற்கு முன்பு, வாதிக்கும் எனக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உண்டு என்றால், சரிதான். சீட்டுப்பணம் கொடுப்பேன். வாதி வக்கீல் மூலம் அனுப்பிய நோட்டீஸை நான் பெற்றுக் கொண்டேன் என்றால், சரிதான். அந்த வக்கீல் நோட்டீசுக்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. அவ்வாறு அந்த கையொப்பம் என்னுடையது அல்ல என்று எனது வழக்கின் எதிர் வழக்குரை மற்றும் பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். கடனை திருப்பி செலுத்தும் பொறுப்பில் இருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக முதன் முறையாக எனது கையொப்பத்தை மறுக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கும் வாதிக்கும் இருந்த சீட்டு கொடுக்கல் வாங்கல் அனைத்தும் முடிந்த பிறகு தான், இந்த கடன் வாங்கினேன் என்றால், சரியல்ல. சீட்டு மட்டும் தான் உண்டு. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பில்லாதவை என்றால், சரியல்ல. வாதிக்கு நான் அசல் தொகையும், வட்டியும், செலுத்த வேண்டும் என்றால், சரியல்ல. நான் உண்மைகளை மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.